# THE DEVELOPMENT AND CHALLENGES OF COMMUNITY-BASED CORRECTION (CBC): A STUDY BASED ON THE OFFENDERS OF KALMUNAI MAGISTRATE COURT FROM 2014 - 2018

**MSM. Safreen**

Magistrate Court Kalmuani

Breez1988@Gmail.Com

**Abstract**

The community-based correction (CBC) for offenders is in practice in Sri Lanka according to the law no. 46 enacted in 1999 in order to be subjected to the wrongdoer under the community correction laws than the imprisonment with the view to make them better citizens of Sri Lanka. However, the familiarity and significance of the law is lacking. Therefore, this study is to explore the development of the CBC laws and the challenges in applying the laws to the convicts. For this study, primary and secondary data were collected from various sources. Direct observation, interview and questionnaire administration were used to collect primary data. Records and statistical reports from Kalmunai Magistrate court has been used as the secondary source. The result shows the CBC application in the society is an efficient method rather that the imprisonment but the familiarity and the significance should be disseminated among the societies with proper mechaniss.

Key words: community based correction, imprisonment and offender.

**ஆய்வின் அறிமுகம்:**

நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதைப்போல் அதற்கான தண்டனை முறைமைகளும் மாறிக்கொண்டுதான் செல்கின்றன. அதன் பின்னணியிலேதான் இலங்கையை பொறுத்தளவிலும் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்லும் நாடுகளின் பட்டியலில் முன்னிலையில் காணப்படுகிறது. அதனைக் குறைப்பதற்காகவும் நாட்டினை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்காகவும் உருவாக்கப்பட்ட சட்டமே இந்த சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைச் சட்டமாகும்.

அந்தவகையில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்திலும் நாளுக்கு நாள் குறிப்பிட்ட அளவான வளக்குகள் பதிவு செய்யப்பட்டு தண்டனைகளும் வளங்கப்படுகின்றன. இந்த நடைமுறையானது நாளாந்தம் சாதாரணமாக நடநடதேறும் ஒரு விடயமாக இருக்கிறதே தவிர குற்றங்களைக் குறைத்து குற்றவாளிகளை அதிலிருந்து சீர்திருத்துவதற்கான எந்தவொரு ஏற்பாடும் காணப்படவில்லை. குறிப்பாக 2013 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இறுந்தே கல்முனை நீதிவான் நீதிமன்றத்திலும் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு குற்றவாளிகளை சீர்திருத்தும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது. விசேடமாக போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத மதுசாரம், பொது இடத்தில் பொது மக்களுக்கு இடையூறு செய்தல், அனுமதியற்ற மதுபான விற்பனை, சட்டவிரோத மண் அகழ்வு போண்ற சில குற்றங்களுக்காக இந்த சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்படுகின்றது.

இலங்கையின் 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைச் சட்டமானது 20 உட் பிரிவுகளைக் கொண்டமைந்த ஒன்றாக காணப்படுகிறது. இச்சட்டத்தின் ஊடாக சிறைத்தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக சமுதாய சீர்திருத்தக் கட்ளைகளை பிறப்பிப்பதன் ஊடாக குற்றவாளிகளை சீர்திருத்துகின்ற பிரதான செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற கொழும்பை தலைமையகமாகக் கொண்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களமே இப்பணியினைச் செய்கின்றது. இலங்யையிலே இருக்கின்ற அனைத்து நீதிவான் நீதிமன்றங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒரு சமுதாய சீர்திரத்த உத்தியோகத்தரும், அவருடன் உதவியாளராக சமுதாய சீர்திரத்த வேலைப் பரிசோதகரும் காணப்படுவர். அதனோடு இணைந்ததான மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஒவ்வொரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சகிதம் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டமைப்பிலேயே நீதிவான் நீதிமன்றங்களில் சமுதாய சீர்திருத்த பிராந்திய காரியாலயங்கள் இயங்கி வருகின்றன.

ஒருவர் சமுதாய சீர்திருத்தக் கட்டளையைப் பெறவேண்டுமானால் அவருக்கு 3 வழிமுறைகள் காணப்படுகின்றன. முதலாவதாக கௌரவ நீதிவான் நிதிமன்ற நீதிபதி அவர்கள் தாமாகவே குறிப்பிட்ட ஒருவருக்கு இக்கட்டளையை

பிறப்பிக்கலாம். இரண்டாவதாக குறிப்பிட்ட குற்றவாளியின் சட்டத்தரணி நீதிமன்றத்திலே சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையை கோரலாம். மூன்றாவதாக குறிப்பிட்ட குற்றவாளியே தாமாக முன்வந்து இக்கட்டளையை கோரலாம். இவ் மூண்று நடைமுறைகளுள் ஏதாவது ஒன்று இடம்பெற்றால் கௌரவ நீதிபதி அவர்கள் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தரை அழைத்து குறிப்பிட்ட குற்றவாளி தொடர்பான தண்டனைக்கு முன்னரான அறிக்கை ஒன்றை தயாரிக்கும்படி கோரிக்கை விடுப்பார். அவ் அறிக்கையிலே குற்றவாளி தொடர்பான பல தகவல்கள் இருக்கும. அவரது தனிப்பட்ட தகவல்கள், குடும்ப விபரம், தொழில் ரீதியான தகவல்கள், கல்வி பின்னணி, குற்றம் செய்ததற்கான பின்னணி போன்றவை அதிவே அடங்கியிருக்கும்.

இவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பிற்பாடு குறிப்பிட்ட நபர் சமுதாய சீர்திருத்த அதிகாரியிடம் ஒப்படைக்கப்படுவார். ஆதன் பின்னர் அவருக்கு சமுதாய சீர்திருத்தக் கட்டளை சம்மந்தமான விரிவான வினக்கங்கள் வளங்கப்பட்டு அவர் சமுதாய வேலை செய்வதற்கான இடம் சம்மந்தமான அறிவுரைகளும், அதனோடு தொடர்பான நிபந்தனைகளும் கோவை வடிவில் வளங்கப்படும். இக் கட்டளையின் பிரகாரம் சிறப்பாக தனது சமுதாய வேலையை நிறைவு செய்பவருக்கு அவர் கட்டளையை சிறப்பாக நிறைவேற்றியமைக்கான நிறைவேற்றுச் சாண்றிதல் திறந்த நீதிமன்றிலே சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தரினால் கௌரவ நீதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் குறிப்பிட்ட நபர் வடுவிக்கப்படுவார். மாறாக அவர் கட்டளையை மீறும் பட்சத்தில் அவருக்கு பிரத்தியேகமான தண்டனை வழங்கப்படும். வழமை போன்று குற்றம் செய்பவருக் தண்டனை வழங்கிவிட்டு அவரது எதிர்காலம் பற்றி சிந்திக்காத நடைமுறையை விட இலங்கையின் இந்த சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைச் சட்டமானது ஏனைய நாடுகளுக்கும் முன்மாதிரியான ஒரு சட்மாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**.ஆய்வின் நோக்கம்.**

**பிரதான நோக்கம்**

குற்றவாளிகள் சிறைக்குச் செல்வதனால் ஏற்படும் பாதிப்புக்களையும், சமுதாயஞ்சார் சீரிதிருத்தக் கட்டளை பிறப்பிக்கப்படுவதனால் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் இனங்கண்டு அவற்றை மக்களுக்குத் தெளிவு படுத்துவதனூடாக குற்றச் செயல்களில் இருந்து விடுபட்ட ஒடு சமுதாயத்தை உருவாக்க முயற்சித்தல்.

**துணை நோக்கங்கள்**

- சமுதாயஞ்சார் சிர்திருத்தக் கட்ளைச் சட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டல்.
- குற்றவாளிகள் சிறைக்குச் சென்றும், தெண்டப்பணங்களை செலுத்தியும் தங்களுடைய பொருளாதாரம் எதிர்காலம் என்பனவற்றை இழக்காமல் தாங்களாகவே சீர்திருத்தக் கட்டளையை திரந்த நீதிமன்றில் கோரும் அளவிற்கு அறிவூட்டல்.
- குற்றம் செய்பவரினால் பாதிக்கப்படுவது அவர் மட்டுமல்லாது அவரைச் சுற்றியுள்ளவர்களும் என்ற யதார்த்தத்தை தெளிவுபடுத்துவதன் ஊடாக குற்றச்செயல்கனைக் குறைக்க முயற்ச்சித்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது அடிப்படையில் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்திய விவரணப் பகுப்பாய்வு கொண்டதாக அமைந்துள்ளது. இதற்கான இரண்டாம் நிலைத் தரவுகள் கல்முனை நீதிவான் நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்த பிராந்திய காரியாலய அறிக்கையிலிருந்து அதிகம் சேகரிக்கப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரிடம் நேர்காணல் மூலமும் பெறப்பட்டுள்ளன. ஆய்வுக்குரிய ஏனைய தகவல்கள் ஆய்வுக்கட்டுரை, நூல்கள், பத்திரிகைச் செய்திகள், அறிக்கைகள் மூலமும் சேகரிக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் வரைபுகள், அட்டவணைகள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

கல்முனை நீதிவான் நீதிமன்றில் 2014 தொடக்கம் 2018 கால வரையான சமுதாய சீர்திருத்தக் கட்டளையாளர்களை மையப்படுத்தி இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் குறிக்கோளுக்கு ஏற்ப பின்வரும் அட்டவணையானது கடந்த ஐந்து வருடங்களாக கல்முனை நீதிவான் நீதிமன்றில் சமுதாய சீர்திருத்தக்கட்டளை வளங்கப்பட்டவர்களின் விபரங்களை குறிப்பிடுகிறது.

**அட்டவணை 01**

**கல்முனை நீதிவான் நீதிமன்றில் 2014 தொடக்கம் 2018 வரை சமுதாய சீர்திருத்தக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை.**

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| சமுதாய சீர்திருத்தக் கட்டளையாளர்களின் எண்ணிக்கை | 08 | 03 | 32 | 07 | 25 |

மூலம்: வருடாந்த அறிக்கை, சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்.

மேலுள்ள அட்டவணையினை நோக்கினால் பொதுவான சில குற்றங்களுக்காக தண்டப்பணம் விதித்தல், சிறைத்தண்டனை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை என்பவை வழங்கப்படாமல் சமுதாய சீர்திருத்தக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கையினை ஆண்டின் அடிப்படையில் காட்டுகின்றது.

**அட்டவணை 02**

**கல்முனை நீதிவான் நீதிமன்றில் 2014 தொடக்கம் 2018 வரை சமுதாய சீர்திருத்தக்கட்டளை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை குற்றத்தின் அடிப்படையில்.**

| குற்றங்கள் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மது போதையில் பொது இடத்தில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தமை | 06 | 02 | 16 | 02 | 06 | 32 |
| சட்விரோத மதுபான விற்பனை | - | - | 09 | 02 | 01 | 12 |
| கஞ்சா தன்வசம் வைத்திருந்தமை | - | - | 02 | 01 | 10 | 13 |
| சட்டவிரோத மண் அகழ்வு | - | - | 02 | 01 | 02 | 05 |
| கஞ்சா கலந்த மாவா தன்வசம் வைத்திருந்தமை | - | - | - | - | 06 | 06 |
| ஏனையவை | 02 | 01 | 03 | 01 | - | 07 |
| மொத்தம் | 08 | 03 | 32 | 07 | 25 | 75 |

மூலம்: வருடாந்த அறிக்கை, சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்.

மேலுள்ள அட்டவணையினை நோக்குகின்ற போது சமுதாய சீர்திரத்தக் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்தினை சற்று அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். அதாவது குற்றங்களில் பல வகைகள் இருந்தும் குறிப்பிட்ட சில குற்றங்களுக்காகவே அதிகம் சீர்திருத்தக் கட்டளையானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது குறிப்பிட்ட குற்றவாளியினை அவர் செய்கின்ற குற்றத்திலிருந்து மீடெடுப்பதனை நோக்கமாக கொண்டதனாலேயே இவ்வாறான குற்றங்களுக்காக சமுதாய சீர்திருத்தக் கட்டளை விதிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 03**

**கல்முனை நீதிவான் நீதிமன்றில் 2014 தொடக்கம் 2018 வரை சமுதாய சீர்திருத்தக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு அதனை பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை.**

| ஆண்டு | மொத்தம் | பூர்த்தி செய்தவர்கள் | கட்டளையை மீறி திறந்த பிடியாணை வழங்கப்பட்டோர் | புணர்வாழ்வு வழங்கப்பட்டவர்கள் | மீண்டும் குற்றவாளியாக வந்தோர் |
|---|---|---|---|---|---|
| 2014 | 08 | 08 | - | - | - |
| 2015 | 03 | 03 | - | - | - |
| 2016 | 32 | 30 | 02 | - | - |
| 2017 | 07 | 06 | 01 | - | - |
| 2018 | 25 | 22 | 02 | 01 | - |

மூலம்: வருடாந்த அறிக்கை, சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்.

மேலுள்ள அட்டவணையின் பிரகாரம் தெளிவாக புரிந்துகொள்ளக் கூடியதான விடயம்தான் சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட எவருமே மீண்டும் குற்றவாளிகளாகவோ அல்லது மீண்டும் சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டவர்களாகவோ நீதிமன்றம் வரவில்லை. மாறாக தண்டப்பணம் வதிக்கப்படுவோரும் சிறைத்தண்டனை வழங்கப்படுவோரும் மீண்டும் மீண்டும் குற்றவாளிகளாக நீதிமன்றம் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. சிறு குற்றம் ஒன்றிற்காக சிறைக்குச் செல்பவர்கள் மீண்டும் அதை விட பெரிய குற்றவாளிகளான வரலாறுகளும் அதிகம் உள்ளன. மாறாக சமுதாய சீர்திருத்தக் கட்டளைச் சட்டமானது குற்றவாளிக்கு சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தினை வளங்கி அவரது குற்றத்தினை அவருக்கு உணர்த்தி அவராகவே அதிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்களை வளங்குகின்றது. அதுமட்டுமல்லாது ஒருவர் குற்றம் செய்வதற்கான பின்னணி என்ன என்பதும் ஆராயப்பட்டு அதை தவிர்ப்பதற்கான நடைமுறைகளை மேற்கொண்டு அதனூடாக அவரை நற்பிரஜையாக்க முயற்சிக்கின்றது. உதாரணமாக சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் சட்டவிரோத மண் அகழ்வு போன்ற குற்றங்களை செய்வோரில் சிலரின் பின்னணியை அவதானித்துப்பார்த்ததில் அவர்களின் குடும்ப வறுமையை போக்குவதற்காக வேறு வழிகளின்றி அந்த விடயங்களை செய்வதாக குறிப்பிட்டிருந்தனர். ஆனால் சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் பிற்பாடு அவர்களது தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவர்களது பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஊடாக அவர்களுக்காக சுய தொழில் உதவிகள் வழங்கப்பட்டு முன்னைய சட்டவிரோத தொழிலில் இருந்து விடுபட்டு தற்போது சிறப்பாக குடும்பத்தை மேற்பார்வை செய்வதாக குறிப்பிட்டிருந்தனர்.

எனவே வெறுமனே தண்டப்பணத்தின் மூலமும் சிறைத்தண்டனையின் மூலமும் செய்யமுடியாத ஒன்றை இந்தச் சமுதாய சீர்திருத்தக் கட்டளை செய்வதனை அவதானிக்கலாம். அந்தவகையில் ஒருவர் சிறைக்குச் செல்வதானால் அவர் எதிர்கொள்கின்ற சிக்கல்களையும் பாதிப்புகளையும் சமதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்படுவதனால் அவருக்குக் கிடைக்கின்ற நன்மைகளையும் நோக்குவதன் ஊடாக இன்னும் விரிவான தகவல்களை பெற்றுக்கொள்ள மூடியும்.

**சிறைக்குச் செல்வதனால் ஏற்படும் பாதிப்புக்கள்**

- குறிப்பிட்ட காலத்துக்கு தனது தொழிலை இழத்தல்( அரச தொழிலாயின் முற்றாக இழக்க வாய்ப்புண்டு)
- அவரது குடும்பம் சீர்குலைகின்றது.
- அவரது பொருளாதாரமும் குடும்பத்தின் பொருளாதாரமும் சீர்குலைதல்.
- பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படல்.
- மேலும் பல வகையான குற்றச்செயல்களுக்கு பழக்கப்படல்.
- நாட்டிற்கு சுமையும் செலவும் அதிகரித்தல்
- குறிப்பிட்ட நபரினுடைய எதிர்காலம் பாதிக்ப்படல்.
- உளரீதியான நோய்கள் ஏற்படல்.

- சமயப்பற்றில் பின்னடைவுகள் ஏற்படல்.
- நாட்டினுடைய அபிவிருத்திக்கு சவாலாக அமைதல்.

**சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்படுவதனால் கிடைக்கப்பெறுகின்ற நன்மைகள்**

- தொழிலுக்கு பாதுகாப்பு கிடைப்பதோடு தொழில் அற்றவர்களுக்கு தொழில்வாய்ப்புக்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.
- குடும்பம் பாதகாக்கப்படுவதோடு சமூகத்திலிருந்து கிடைக்கும் அவப்பெயரும் இல்லாமல் ஆக்கப்படும்.
- அவரது பொருளாதாரமும் குடும்பத்தின் பொருளாதாரமும் பாதுகாக்கப்பட்டு பொருளாதார விருத்திக்கான ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- பிள்ளைகளின் கல்வி பாதுகாக்கப்பட்டு கல்வியை தடையின்றி தொடர்வதற்கான உதவிகளும் செய்துகொடுக்கப்படும்.
- குறிப்பிட்ட குற்றச் செயலில் இருந்து விடுபட்டு சிறந்த நற் பிரஜையாக வாழ வாய்ப்பு ஏற்படும்.
- சிறைச்சாலையில் இவரைப் பராமரிப்பதற்கான செலவுகள் இல்லாமல் ஆவதோடு இவரது சமுதாய வேலையால் அரச நிறுவனங்களின் சில செலவுகுளும் குறைக்கப்படுகின்றது.
- உளவள ஆலோசனைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதனால் உளரீதியாக திருப்தியடைந்த நபராக மாறுவார்.
- சமய ரீதியான ஆண்மீக வழிகாட்டல்கள் வழங்கப்படுவதனால் சமயப்பற்று அதிகரிக்கும்.
- குற்றச் செயல்களும் குற்றவாளிகளின் எண்ணிக்கையும் குறைவதனால் நாட்டினுடைய எதிர்காலம் சிறப்பானதாய் அமையும்.

சிறைவாசத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும் சீர்திருத்தக் கட்டளையினால் ஏற்படுகிற நன்மைகளையும் உற்றுநோக்கினால் மனிதன் அறிந்திருக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு விடயமாக இந்த சமுதாய சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தினை கூறமுடியும். உண்மையிலேயே ஒரு மனிதன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வேண்டுமென்றே குற்றம் செய்துவிடுவதில்லை. மாறாக குறிப்பிட்ட நேரத்தில் அவனது மனோநிலை மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பன அவனை குற்றவாளியாக்கி விடுகின்றன. எனவே அவனை குற்றவாளியாக மட்டும் நோக்காமல் அவன் குற்றம் செய்ததற்கான பின்னணி மற்றும் குற்றம் செய்யும்போது அவனுக்கு இருந்த மனோநிலை என்பன சம்மந்தமாகவும் கவனம் செலுத்துவதோடு அவன் தண்டிக்கப்படுவதால் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும் இல்லாமல் செய்யக்கூடிய ஒரு மகத்தான பணியினை இச் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் செய்கின்றதென்றால் அது மிகையாகாது.

எமது நாடு இன்று எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய சசவால்களுள் ஒன்றாக போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை என்பன காணப்படுகின்றன. இதிலிருந்து எமது நாட்டை மீட்டெடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் சட்டரீதியான நடவடிக்கைகளுல் மிகவும் சிறந்த ஒரு நடைமுறையாக இந்த சமுதாயஞ்சார் சீர்திருத்தக்கட்டளைச் சட்டத்தினை நோக்கலாம். குற்றம் செய்பவர்களின் மனோநிலையினையும் அவர் குற்றம் செய்வதற்கான சூழலும் மாற்ப்படாத வரையில் குற்றத்தினை குறைக்கவும் முடியாது குற்றவாளியினை திருத்தவும் முடியாது. சமுதாய சீர்திருத்தக் கட்களையில் உளவள ஆலோசனைகள் மற்றும் சமய போதனைகள் என்பன வழங்கப்படுவதோடு குறிப்பிட்ட குற்றவாளியினை மேற்பார்வை செய்யவும் வாய்ப்புக்கள் காணப்படுவதனால் ஏதாவது ஒரு வகையில் குற்றச்செயல் குறைவதற்கான வாய்ப்புகள் காணப்படும். எனவே சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் சம்மந்தமாக பொது மக்களுக்கு சிறந்த அறிவு இருக்குமாயின் நிச்சயமாக குற்றச்செயல்களில் இருந்து விடுபட்டதொரு ஆரோக்கியமா சமூகத்தை உருவாக்க முடியும்.

**உசாத்துணைகள்**


1. Offenders information register, Department of community based correction, Magistrates court kalmunai.
2. Government gazette of social republic of sri lanka, 1999, December ,10
3. Performance report, Department of community based correction, Head office, Colombo, 2018
4. இலங்கை குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை.